www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 3.00 மணி

## உயிரியல்

மதிப்பெண்கள்: 70

### பகுதி - I - உயிரி - தாவரவியல்

மதிப்பெண்கள்: 35

#### பிரிவு - I

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:** 8×1=8

1. மயோசோட்டிஸின் மகரந்தத்துகளின் அளவு
   அ) 10 மைக்ரோமீட்டர் ஆ) 20 மைக்ரோமீட்டர் இ) 200 மைக்ரோமீட்டர் ஈ) 2000 மைக்ரோமீட்டர்
2. மெண்டலின் கலப்பின ஆய்வுகள் மேற்கொண்ட காலத்தை தேர்ந்தெடு.
   அ) 1870 - 1877 ஆ) 1850 - 1870 இ) 1857 - 1869 ஈ) 1856 - 1863
3. வைரஸ் அற்ற தாவரங்கள் .............. இருந்து உருவாக்கப்படுகிறது.
   அ) உறுப்பு வளர்ப்பு ஆ) ஆக்குத்திசு வளர்ப்பு இ) புரோட்டோபிளாசா வளர்ப்பு ஈ) செல்வளர்ப்பு
4. ஓர் உயிரினம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்து தனது பணியினை செயல்படுத்தும் சூழ்நிலை தொகுப்பு
   அ) புவி வாழிடம் ஆ) செயல்வாழிடம் இ) நிலத்தோற்றம் ஈ) உயிர்மம்
5. தனிசெல் புரத உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பாசி இனம்
   அ) மெத்தைலோபில்லஸ் ஆ) அல்கலிஜீன்ஸ் இ) சாக்கரோமைசட்ஸ் செர்வீசியே ஈ) குளோரெல்லா
6. வேர்க்கடலையின் பிறப்பிடம்
   அ) பிலிப்பைன்ஸ் ஆ) இந்தியா இ) பிரேசில் ஈ) வட அமெரிக்கா
7. உவர் தன்மை மற்றும் பூச்சி எதிர்ப்பு தன்மை கொண்ட அரிசி ரகம்
   அ) இயல் நெல் ரகம் ஆ) அடோமிடா 2 இ) நோரின் 10 ஈ) பொன்நிற அரிசி
8. கீழ்கண்டவற்றுள் எது எவை இயற்கை சூழல் மண்டலம் அல்ல.
   அ) வனச்சூழல் மண்டலம் ஆ) நெல் வயல் இ) புல்வெளி சூழல் மண்டலம் ஈ) பாலைவன சூழல் மண்டலம்

#### பிரிவு - II

**II. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடை அளிக்கவும்.** 4×2=8

9. இருமடிய வித்தாக்கம் என்ற சொல்லை வரையறு.
10. முதுமரபு மீட்சி என்றால் என்ன?
11. மரபணு மாற்றத்திற்கு பயன்படும் வேதிப்பொருட்களின் பெயர்களை கூறுக.
12. ஆற்றல் பிரமிட் எப்பொழுதும் நேரானவை காரணம் கூறு.
13. வல்கனைசேசன் என்றால் என்ன?
14. முதல்நிலை அறிமுகப்படுத்தலையும், இரண்டாம் நிலை அறிமுகப்படுத்தலையும் வேறுபடுத்துக.

#### பிரிவு - III

**III. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்கவும். வினா எண் 19க்கு கட்டாயமாக விடை அளிக்கவும்.** 3×3=9

15. மரபணு வரைபடம் என்றால் என்ன? அதன் பயன்களை தருக.
16. உறைகுளிர் பாதுகாப்பு என்றால் என்ன?
17. ஆல்பிடோ விளைவு என்றால் என்ன? அதன் விளைவுகளை எழுதவும்.
18. ஓசோன் குறைதலால் ஏற்படும் விளைவுகள் யாவை?
19. முதிர்ந்த கருப்பையின் அமைப்பை படம் வரைந்து பாகம் குறிக்கவும்.

#### பிரிவு - IV

**IV. அனைத்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.** 2×5=10

20. அ) தகுந்த படத்துடன் சூலின் அமைப்பை விவரி. (அல்லது)
    ஆ) உயிரி தொழில்நுட்பவியலின் பயன்பாட்டை குறிப்பிடுக.
21. அ) புலனுணர்வு மாற்ற மருந்துகள் என்றால் என்ன? அபின் மற்றும் கஞ்சாச்செடி பற்றி குறிப்பு வரைக.
    (அல்லது)
    ஆ) காடழிப்பின் விளைவுகள் யாவை?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - II - உயிரி - விலங்கியல்

மதிப்பெண்கள்: 35

### பிரிவு - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 8×1=8

1. எவ்வகைக் கன்னி இனப்பெருக்கத்தில் பெண் உயிரிகள் மட்டுமே உருவாகின்றன?
அ) அர்ரீனோடோக்கி ஆ) தெலிடோக்கி இ) ஆம்ஃபிடோக்கி ஈ) 'அ' மற்றும் 'இ' இரண்டும்
2. கீழ்வருவனவற்றுள் ஹார்மோன் கருத்தடை மாத்திரைகளின் செயல்கள் பற்றிய தவறான கூற்று எது?
அ) அண்ட வெளிப்பாட்டை தடை செய்தல்
ஆ) விந்து செல்லாக்கத்தை தடை செய்தல்
இ) கருப்பை வாய் கோழையின் தன்மை மாற்றத்தால் விந்து செல் நுழையும் பாதை மற்றும் விந்து செல் நகர்வதை பலவீனப்படுத்துகின்றது
ஈ) கருப்பை உட்கோழைப் படலத்தில் ஏற்படும் மாற்றம் கருப்பதிவிற்கு எதிரான சூழலை ஏற்படுத்துகின்றது.
3. Y குரோமோசோமை கண்டுபிடித்தவர் ...........
அ) ஸ்டிவன்ஸ் ஆ) ஹென்கிங் இ) லையான் ஈ) ஜான் கோட்டோ
4. புரதச்சேர்க்கை நிகழ்ச்சி மைய செயல்திட்டத்தின் சரியான வரிசையைக் கண்டறிக.
அ) படியெடுத்தல், மொழிபெயர்த்தல், இரட்டிப்பாதல்
ஆ) படியெடுத்தல், இரட்டிப்பாதல், மொழிபெயர்த்தல்
இ) நகலாக்கம், மொழிபெயர்த்தல், படியெடுத்தல் ஈ) இரட்டிப்பாதல், படியெடுத்தல், மொழிபெயர்த்தல்
5. ............ அதிகமாக எடுத்துக்கொள்வது கல்லீரல் அழற்சி நோயை ஏற்படுத்துகிறது.
அ) அபின் ஆ) மது இ) புகையிலை ஈ) கோகெய்ன்
6. உலக உயிரிய எரிபொருள் தினமாக கடைபிடிக்கும் தினம் எது?
அ) அக்டோபர் 6 ஆ) நவம்பர் 8 இ) ஆகஸ்ட் 10 ஈ) செப்டம்பர் 12
7. சில இயற்பிய செயல்பாடுகள் மூலம் தன்நிலை பேணும் விலங்குகள்
அ) ஒத்தமைவான்கள் ஆ) ஒழுங்கமைவான்கள் இ) வலசைபோகின்றன ஈ) செயலற்ற நிலையில் உள்ளன
8. குடிநீரில் அதிக அளவு புளூரைடு ........... ஐ ஏற்படுத்துகிறது.
அ) நுரையீரல் நோய் ஆ) குடல் தொற்றுகள் இ) புளூரோஸிஸ் ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

### பிரிவு - II

II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 4×2=8

9. இளம் உயிரி கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
10. ராவோல்ஃபியா வாமிடோரியா எனும் மருத்துவ தாவரத்தில் உள்ள செயல்படு வேதிப்பொருளின் பெயர் என்ன? இது எந்த வகை பல்வகைத்தன்மையை சார்ந்துள்ளது?
11. ரோஸி எவ்வாறு இயல்பான பசுவினின்று வேறுபடுகின்றது என்பதை விளக்குக.
12. நடத்தையியல் வரையறு.
13. மேயர் ரோகிடான்ஸ்கி நோய்க் குறைபாடு என்றால் என்ன?
14. நிணநீர் முடிச்சில் காணப்படும் மூன்று அடுக்குகள் யாவை?

### பிரிவு - III

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண் 19 கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9

15. இனப்பெருக்க மண்டலத்தின் முக்கிய செயல்பாடுகளை எழுதுக.
16. கரு உறைநிலை குளிரூட்டும் முறையை பற்றி குறிப்பு எழுதுக.
17. முழுமைத்திறன் பகுதித்திறனிலிருந்து வேறுபடுத்துக.
18. உயிர்த்தொகையின் பண்புகளை எழுதுக.
19. டார்வினியக் கோட்பாடுகளுக்கான முக்கிய எதிர்கருத்துக்கள் யாவை?

### பிரிவு - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×5=10

20. அ) அண்ட செல்லின் அமைப்பைத் தகுந்த வரைபடங்களுடன் விவரி. (அல்லது)
ஆ) எச்.ஐ.வின் அமைப்பினை படத்துடன் விவரி.
21. அ) மரபணுக் குறியீடுகளின் சிறப்புப் பண்புகள் பற்றி விவரி. (அல்லது)
ஆ) மண்ணின் பண்புகள் குறித்து குறிப்பு வரைக.

-----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com